திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தப் புத்தக விற்பனையை மாணவர் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்தால், எல்லா மாணவர்களுக்கும் சிரமம் இல்லாமல் ஜூன் மாதத்திற்குள் புத்தகங்கள் கிடைத்துவிடும். தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் விற்பனை செய்வதால் அவர்கள் பல கஷ்டங்கள் கொடுக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த விற்பனை உரிமையை கூட்டுறவு அங்காடிகள் கேட்பதாக இருந்தால், அவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படும். பள்ளிக்கூட கூட்டுறவு அங்காடிகள் முன்வந்தாலும் அவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படலாம். ஆனால் அந்த மாவட்டத்தில் கொண்டு சேர்க்கும் முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். இப்போதும் அப்படித்தான் செய்கிறது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, தாலுகா அளவிலும், வட்ட அளவிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் விற்பனைச் செய்வதற்கு அனுமதிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பிர்க்கா அளவிலுள்ள சிறிய சிறிய வியாபாரிகள் முன்வந்தாலும், அவர்களுக்கும் விற்பனை உரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக்கூட நூல்களை விற்பனை செய்வதற்கு என்று பதிவு செய்யப்பட்டவர்கள் மூலமாக புத்தகங்கள் விநியோகிக்கப்படும். மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை உரிமை கோரினால், அவைகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படும். பதிவு செய்யப்பட்ட வியாபாரிகள் இடத்தில், சில்லரை வியாபாரிகள் உரிமை பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்பப் பள்ளிகள்

* 499. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பப் பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலைகள் உடன் ஏற்படுத்த திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1972 மார்ச் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) முந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்கள் அனைவற்றிலும் தொடக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் பாடசாலைகள் திறக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதிக மக்கள் தொகை இருந்தாலும் ஒரு மைல் தூரத்தில்தான் மற்றொரு பள்ளி திறக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஒரு பர்லாங் தூரத்திலேயே இரண்டு பள்ளிகள் திறப்பதற்கு வசதி இருந்தாலும் அனுமதி கொடுக்கப்படுவதில்லை. எனவே, தூரத்தைப் பார்க்காமல், போதுமான அளவு மாணவர்கள் இருந்தால், ஒரு பள்ளியின் பக்கத்திலேயே, அதாவது ஒரு மைலுக்கு உள்ளேயே இன்னொரு பள்ளியும் திறக்கப்படக் கூடிய அளவில் விதிமுறைகளை அரசு தளர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது ஒரு வட்டாரத்தில் 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக இருந்தால் பள்ளி திறக்கப்படுகிறது. அதிக மக்கள் தொகை இருந்தாலும் இரண்டு பள்ளிகள் திறக்கப்படுவதற்கு, இயற்கைத் தடைகளோ அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களோ இருந்தாலன்றி, அனுமதி அளிப்பதில்லை. ஏனென்றால், அதனால் போட்டா போட்டிகள் ஏற்பட்டு, சில மாச்சரியங்கள் ஏற்பட்டு, இரண்டு பள்ளிகளும் சரிவர நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டு, அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு விடுவர். ஏதாவது தனிப்பட்டக் காரணங்கள் இருந்தால், பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியோடு இரண்டாவது பள்ளி திறப்பதற்கு வகை செய்யலாம்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களில் காலனிகளில் துவக்கப்பள்ளிகள் நடைபெறுகின்றன. அங்கே ஏறக்குறைய 100 அல்லது 180 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதனால் அங்கு ஒரு ஆசிரியர் தான் வேலை பார்க்கிறார். அதை இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களாக மாற்றுவதற்கு சட்டச் சிக்கல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையை நீக்க ரூல்ஸ்சை கொஞ்சம் ரிலாக்ஸ் செய்தாவது, அதிகமான ஆசிரியர்களைப் போட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவ்வளவு மாணவர்களுக்கு இவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று இருக்கிறது. இவை தவிர, காலனிகளில் 80 அல்லது 90 மாணவர்கள் படித்தாலும், தனிப்பட்ட காரணங்கள் ஏதாவது இருந்தால், விதியை தளர்த்தி, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அனுமதி வழங்குவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைக் கல்வி மானியக் கோரிக்கை மீது வைத்துக்கொள்ளலாம். இவை கொள்கைப் பிரச்சனைகள். கேள்வி நேரத்தின்போது இம்மாதிரி பிரச்சினைகளை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் பள்ளிக் கூடங்களுக்குப் பக்கத்தில் அரசாங்கப் பள்ளிகள் திறக்கப்படும்போது, அந்த தனியார் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து, அதனால் ஆசிரியர்களை குறைக்கும் நிலை ஏற்படுகிறது. அதனால் வேலை நீக்கம் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்க பள்ளிகளில் வேலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி வேலை நீக்கம் பெறும் ஆசிரியர்களை விட்டுவிட முடியாது. அவர்களுடைய தகுதி, திறமை, பணியாற்றிய காலம் இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, புதிதாக ஆரம்பிக்கப்படும் அரசாங்க பள்ளிகளில் அவர்களை நியமனம் செய்ய விண்ணப்பிப்பார்களானால், பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து அதற்கு அனுமதி அளிப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : கிராமங்களில் ஆரம்பப்பள்ளி துவக்குவது என்றால் ஒரு மைலுக்குள் இருக்கக்கூடாது என்று . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அமைச்சர் சொன்னதை நீங்கள் திருப்பிச் சொல்ல வேண்டாம். உங்கள் கேள்வியைப் போடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பஞ்சாயத்து யூனியன்களில் குழந்தைகள் ஒரு மைல் நடந்துபோவது என்பது சிரமமாக இருப்பதால், ஒரு மைலுக்குள் இன்னொரு பள்ளி ஏற்படுத்துவதற்கு மாணவர்கள் இருந்தால்—ஒரு ஆசிரியருக்குத் தேவையான மாணவர்கள் இருந்தால் அதைத் திறப்பதற்கு அனுமதிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கூடுமான வரையில் ஒரு மைல் என்கிறபோது பள்ளி சென்டர் என்றால் அதிலிருந்து அரை மைல் ரேடியல்தான் வரும். ஒரு பள்ளிக்கூடம் இருந்து அங்கே 100 பிள்ளைகள்

படிக்கிறார்கள் என்றால் இன்னொரு பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்த இங்கிருந்து 50 மாணவர்கள் பிரிந்துபோய், இங்கே 50, அங்கே 50 என்கிற போது இங்கே முன்பு இருந்த ஆசிரியர் பாதிக்கப்படுவதும் ஏற்படுகிறது. ஆகவே தான் எல்லா வசதிகளையும் உத்தேசித்து ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்து ஒரு மைல் தூரத்திற்குள்ளாக இன்னொரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த அனுமதி அளிப்பதில்லை.

* 500. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதியதாக ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு ஆரம்பக் கல்வி இயக்குநர் அனுமதி பெற வேண்டும் என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், இம் முறை எப்பொழுதிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1964-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : பல கிராமங்களில் புதிய பள்ளிக்கூடங்களுக்கு நாம் அனுமதி கொடுத்துக்கொண்டே போகிறோம். பழைய பள்ளிக்கூடங்களை மராமத்து செய்வதில்லை. ஆகவே பழைய பள்ளிக்கூடங்களை முறையாக மராமத்து செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான நிதி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய 14 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்கள் நல்ல கட்டிடங்களில்தான் இருக்கின்றன. 7 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்களுக்குத்தான் கட்டிடம் இல்லை. அவை எல்லாவற்றுக்கும் கட்டிடம் அமைத்துக் கொடுக்க 8 கோடி ரூபாய் தேவைப் படுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடத்தில் அதைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முன்பு ஒரு துவக்கப்பள்ளிக்கு 4 ஆயிரம் ரூபாய் அரசு மானியமும், ஊராட்சி ஒன்றியங்கள் 8 ஆயிரம் ரூபாய் ஈட்டுத் தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி 8 ஆயிரம் ரூபாயை அரசு மானிய